Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, OCTOBER 4, 2021

திங்கட்கிழமை ஒக்டோபர் 04, 2021 | ஒளி: 07 கதிர்: 117 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மதுவால் நாளாந்தம் 75 பேர் மரணம்

மதுப் பாவனையால் ஏற்படக்கூடிய நோய்கள், விபத்துகள், அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளால் நாளாந்தம் நாட்டில் 75-80 பேர் உயிரிழக்கின்றனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

இந்திய – இலங்கை பங்குடைமையை

# வலுவாக்குவது குறித்து கரிசனை




இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா திருகோணமலையில் உள்ள எண்ணெய்த்தாங்கி தொகுதிகளை நேற்று (03) பார்வையிட்டார்.

தொடர்ச்சி P2

## பிரச்சினைகளுக்கு மேல் சீமெந்தை சுமக்கின்றனர்

### விஜயவர்தன குற்றச்சாட்டு; சுபிட்சத்தின் பலனே இதுவாகும் என்கிறார்



மூன்று மாதங்கள் கடந்தும் அரசாங்கம் சமையல் எரிவாயு, பால்மா பிரச்சினைக்கு தீர்வு வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, தற்போது சீமெந்து பிரச்சினை மக்கள் தலையில் சுமையாய் விழுந்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2



## இன்னும் 12 நாள்கள்

தற்போது அமலில் இருக்கும் பயணக்கப்பாடுகளை ஒக்டோபர் 16ஆம் திகதியுடன் தளர்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக கொவிட்-19 செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா, தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## திலீபன் வைத்தியசாலை புனரமைப்பு

எஸ். தில்லைநாதன்



போருக்குப் பின்னர் கைவிடப்பட்டிருந்த ஆழியவளை திலீபன் வைத்தியசாலைக் கட்டடத்தை, 2.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்கள் போராட்டம்

ஆசிரியர் தினமான ஒக்டோபர் 6ஆம் திகதியன்று, மாபெரும் தொடர் போராட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக,இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 312 பிரதேச கல்வி அலுவலகங்களின் அடிப்படையில், இந்தப் போராட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக, அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## பெரமுனவின் வவுனியா கூட்டத்தில் சலசலப்பு

க. அகரன்

2022 வரவு- செலவுத்திட்டத்தில் கிராமங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் கிராம மட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் வவுனியா ஆனந்தி ஹோட்டலில் நேற்று (03) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



## அரசியல் பேசுவதற்கு தலதாவுக்கு வரவில்லை

இலங்கையின் அரசியலைப் பற்றிப் பேசுவதற்கு, ஸ்ரீ தலதா மாளிகைக்கு வரவில்லையெனத் தெரிவித்துள்ள இலங்கைக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகாரச் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, புத்தபகவானைத் தரிசிப்பதற்காகவே கண்டிக்குத் தான் விஜயம் செய்துள்ளேன் என்றார்.

கண்டி, ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்று (03) விஜயம் செய்த இவரிடம், ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கான முதல் விஜயத்தை மேற்கொண்டுள்ள தான், சிறந்த ஆரம்பமாகத் தனது பயணத்தை தலதா மாளிகையை வழிபட்ட பின்னர் ஆரம்பிக்கக் கிடைத்துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளார்.

சேஹ்ன் செனவிரத்ன

## மாகாண சபைத் தேர்தலை கண்டு அச்சமில்லை



மாகாண சபைத் தேர்தலைக் கண்டு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என தெரிவித்துள்ள இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை மற்றும் அபிவிருத்தி மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தேர்தல் எந்நேரம் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## கொரோனா தொற்றுக்கு பின்னரான குணங்குறிகள்

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பின்னர் 90 தொடக்கம் 180 நாள்களுக்குள் நீண்ட காலமாக வரும் ஒன்பது பிரதானமான குணங்குறிகளின் விவரங்களை ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு, கல உயிரியல் பணிப்பாளரான வைத்தியர் சந்திமா ஜீவந்ர புதிய ஆய்வு ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பெறுமதியான இடங்கள் சீனாவுக்கு; இந்தியா–அமெரிக்காவுக்கு வளங்கள்

### அலவத்துவல எம்.பி குற்றச்சாட்டு



நமது நாட்டின் பெறுமதி மிக்க இடங்களை சீனாவுக்கு விற்கும் இந்த அரசாங்கம், மறுபுறம் இந்தியாவையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்த மிகுதியுள்ள வளங்களை விற்பதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பின் ஜே.சீ. அலவத்துவல, இதற்கமையவே யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் ஏகபோக உரிமை அமெரிக்காவிடமும் தற்போது திருகோணமலை எண்ணெய் தாங்கியை இந்தியாவுக்கு விற்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2


## கொரோனா மரணங்கள் 13,059 ஆக அதிகரிப்பு

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்றையதினம் மேலும் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

22 ஆண்களும் 18 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 13,059 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 28 பேரும் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டோரில் 11 பேரும் 30 வயதுக்குட்பட்டவர்களில் ஒருவரும் மரணித்துள்ளனர்.

## மஹிந்தவின் புதல்வர் முதலமைச்சர் வேட்பாளர்?



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வரான ரோஹித ராஜபக்ஷ, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2

## 'அருணோதயம் நகர்' இன்று கையளிப்பு

இந்திய நிதி உதவியின் கீழ், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வவுனியா மாவட்டத்தில் வெண்கல செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவில் 'மெனிக்பாம்' கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 'அருணோதயம் நகர்' கிராமம், உலக குடியிருப்பு தினமான இன்று (04) மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## மலையக தனிவீடுகள் இன்று கையளிப்பு

ஆர்.ரமேஸ்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடனும் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடனும் மலையக பெருந்தோட்ட பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தனிவீடுகள், இன்று (04) பயனாளிகளிடம் கையளிக்கப்படும்.

தொடர்ச்சி P2



## முழுநாளும் கேள்வி நேரம்

பல்வேறு காரணங்களால் இதுவரை பாராளுமன்றத்தில் கேட்கப்படாத வாய்மூல விடைகளுக்கான 40 கேள்விகளை கேட்பதற்காக, இன்று (04) முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 வரையான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## விவசாயிகளுக்கு இழப்பீடு கோரிக்கை

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அந்த விவசாய சமூகத்தினருக்காக நீதி கோரி, உயர்நீதிமன்றம் வரை செல்ல ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வலுவாக்குவது குறித்து கரிசனை

இந்த எண்ணெய் தாங்கிகளின் (Lower Tank Farms) தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் இலங்கையின் சக்தி துறைப்பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக இந்திய - இலங்கை பங்குடைமையை மேலும் வலுவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்தும் LIOC அதிகாரிகளால் அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

LIOC நிறுவனத்தின் புதிய தயாரிப்பான 'Servo Pride ALT 15W-40'ஐ இந்த விஜயத்தின்போது அறிமுகம் செய்துவைப்பதற்காக LIOC நிறுவனத்துடன் இணைந்துகொண்டமை குறித்து வெளியுறவு செயலர் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தினார்.

# மதுவினால் நாளாந்தம்

15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகின்றமை பாரதூரமான பிரச்சினை என புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சர்வதேச மது ஒழிப்பு தினம் நேற்று (03) ஆகும்.

கௌவி

## இன்னும் 12 நாள்கள்

தற்போது அமலில் இருக்கும் சுகாதார வழிகாட்டல்கள் மக்கள் முறையாக பின்பற்றுவார்களாயின், டிசெம்பர் மாதத்துக்குள் கொரோனா எச்சரிக்கையிலிருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுக்க முடியும் என்றும் நம்பிக்கைத் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்தை தாண்டியுள்ளது என்பதுடன், நாளொன்றுக்கு இனங்காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்திலும் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திலீபன் வைத்தியசாலை புனரமைப்பு

இதற்கமைய, அதனை புனரமைத்து, ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்க வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளுக்காக முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கான 'கிராமத்துடனான உரையாடல்' மக்கள் சந்திப்பின் ஓர் அம்சமாக, அண்மையில், ஆழியவளை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அங்கஜன் இராமநாதன், அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான திலீபன் வைத்தியசாலை கட்டிட புனரமைப்பு விடயம் குறித்து முன்மொழியப்பட்டது.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு நேடியாக விஜயத்தை மேற்கொண்ட அங்கஜன் இராமநாதன், வைத்தியசாலை கட்டிடத்தை புனரமைத்து மீள இயங்க வைப்பதற்காக, வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக, கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்படும் 3 மில்லியன் ரூபாய் திட்டத்தில், 2.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டை வழங்கி வைத்தார்.

# பிரச்சினைகளுக்கு மேல் சீமெந்தை சுமக்கின்றனர்



சமையல் எரிவாயு, பால்மாவிலிருந்து மக்களை இப்போது சீமெந்து வரிசைக்கு இந்த அரசாங்கம் தள்ளிவிட்டு, கைகளைத் துடைத்துக்கொண்டுள்ளது என்றார்.

நல்லாட்சி காலத்தில் நாம் சமையல் எரிவாயு, சீமெந்து, பால்மா, உரம் என்பவற்றை குறைந்த விலைக்கு மக்களுக்கு வழங்கினோம். ஆனால் சுபீட்சமான நாட்டை அடைவதற்காக நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்பிய மக்கள், இன்று சுபீட்சத்துக்குகான நோக்கின் பலனை அனுபவிக்கின்றனர் என்றார்.

பால்மா பிரச்சினைக்கு தீர்வை வழங்க அரசாங்கத்தால் வழங்க முடியாத்தால், ஒரு பெக்கட் பால்மாவுக்காக மக்கள் பல நாட்கள் வரிசையில் நின்கின்றனர். காலையில் பால்மா வரிசைக்கு செல்பவர்களுக்கு மாலையாகியும் ஒரு பெக்கட் பால்மா கூட கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்புகின்றனர்.

மொட்டுவின் ஆட்சியின் கீழ், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த வர்த்தகர்களுக்கு இடமளிக்கப்போவதில்லை என ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று வர்த்தகர்களின் தேவைக்கமையவே செயற்படுகின்றனர்.

பால்மாவை 200 ரூபாயால் அதிகரிப்பதாக அரசாங்கம் பால்மா நிறுவனங்களிடம் வாக்குறுதி வழங்குகிறது. மறுபுறம் விலை அதிகரிப்பை காலம் தாழ்த்துகின்றது. இன்று நடைபெறவுள்ள அமைச்ரவை சந்திப்பில், பால்மா விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. அப்படியாயின் ஒரு கிலோகிராம் பால்மாவை 1,145 ரூபாய்க்கு வாங்கும் நிலை ஏற்படும் என்றார்.

எனவே, பொருளாதார முகாமைத்துவத்தை முன்னெடுப்பதில் அரசாங்கத்திடம் எவ்வித திட்டமும் இல்லை. தாம் நினைத்த நினைத்தவாறு பொருளாதாரத்தை கையாள சென்றதாலேயே மக்களை வரிசையில் காக்க வைக்கும் அரசாங்கமாக இது மாறியுள்ளது. ஆகவே நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்பிதை நினைத்து இன்று மக்கள் கவலையடைகின்றனர் என்றார்.

# ஆசிரியர் தினத்தன்று...

எந்த இடையூறுகள் வந்தாலும் தொழிற்சங்கங்கள் தொடர்ந்து தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும், அவர் கூறினார்.

இதேவேளை பொதுமக்கள் பாகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்தை மறுத்துள்ள, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண செயலாளர் புயல்நேசன், தங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையிலும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

ஆசிரியர் சம்பளப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாது தொழிற்சங்கப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், 'வடமாகாணத்தில் முழுமையாக நிகழ்நிலைக் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது' பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசூரிய தெரிவித்திருந்தார்.

வடமாகாணத்தின் யாழ் பணிமனையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று (03) அச்சங்கம் நடத்தியது. இதில், சங்கத்தின் யாழ் வலய செயலாளர் குலேந்திரன் வெல்வின், கிளிநொச்சி வலயக்கல்வி செயலாளர் பொன்னுத்துரை காண்டீபன், மாவட்ட பிரதிநிதி பரமசிவம் கஜமுகன் போன்றோர் கலந்து கொண்டனர்.

அமைச்சரின், இக்கருத்தின் மூலம் இனவாதத்தை தூண்டி மக்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் குழப்பத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. உண்மையில் வடமாகாண ஆசிரியர்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை போராட்டத்துக்கு வழங்குகின்றனர் என்றார்.

ஆசிரியர் தினமான எதிர்வரும் 6ஆம் திகதி, சகல கோட்ட மட்டத்திலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், ஆசிரியர்கள் ஈடுபடவுள்ளனர்.

பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் வடமாகாண ஆளுநரால் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இவை தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை எந்த செய்திகளையும், கடிதங்களையும் நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட அவர், கடந்த காலத்தில் ஆசிரியர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்காத வடமாகாண ஆளுநர், பாடசாலை ஆரம்பிக்கும் விடயத்தில் மட்டும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும் என்றார்.

## பெரமுனவின் வவுனியா கூட்டத்தில் சலசலப்பு

அக்கட்சியின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே கே மஸ்தான் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், கட்சியின் வவுனியா மாவட்ட பிரமுகர்களுடன் ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது தேசிய சுதந்திர முன்னணியின் வவுனியா- தெற்கு சிங்கள பிரதேசசபை உறுப்பினர் எஸ். எம். ஜே. தர்மகீர்த்தி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணியின் வவுனியா- தெற்கு சிங்கள பிரதேசசபை உறுப்பினர் சம்பத் பியதுங்க ஆகியோர் கூட்டத்துக்கு புகுந்து, தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என ஏற்பாட்டாளர்களுடன் வாதிட்டனர்.

இதனால், கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. எனினும், அங்கிருந்தவர்கள் விளக்கமளித்தனர். அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அவ்விருவரும் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

## கொரோனா தொற்றுக்குப்..

தொற்றுக்குள்ளான நான்கு தொடக்கம் 12 வாரங்கள் மற்றும் அதற்குப் பின்னரான 12 வாரங்களையே குறித்த காலப் பகுதியானது இனங்காட்டுவதாக ஜீவந்ர தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களிலேயே பெரும்பாலும் குறித்த குணங்குறிகள் காணப்படுவதாகவும், பெண்களில் மேலும் பொதுவானதாகக் காணப்படுவதாக ஜீவந்ர கூறியுள்ளார்.

## 'அருணோதயம் நகர்' இன்று கையளிப்பு

மாண்புமிகு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஶ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா ஆகியோரினால் இந்த வீடுகள், மெய்நிகர் நிகழ்வின் ஊடாக கையளிக்கப்படும்.

கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை கட்டடப் பொருட்கள். கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் பங்கேற்பர்.

## முழுநாளும்

அத்துடன், இவ்வாரத்துக்கான சபையமர்வு இன்று (04) ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் நடைபெறும்.

# மஹிந்தவின் புதல்வர்...

வடமேல் மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளராகவே அவர் களமிறங்கவுள்ளார்.

ரோஹித்த ராஜபக்ஷ, பல சந்தர்ப்பங்களில் குருநாகல் மாவட்டத்துக்குச் சென்று, சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார். குருநாகல் வைத்தியசாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை செய்திருந்த அவர், அங்குள்ள குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசியல் கூட்டணியொன்றை ஏற்படுத்தி, அதனூடாக தன்னை வடமேல் மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துமாயின், அதற்குத் தான் தயாரென, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, பிரதமரின் இளைய புதல்வரான ரோஹித ராஜபக்ஷவும், களமிறங்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மலையக தனிவீடுகள் இன்று கையளிப்பு

இதற்கான நிகழ்வு. பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதனை, அலரிமாளிகையில் இருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மெய்நிகர் நிகழ்வின் ஊடாக ஆரம்பித்துவைப்பார். இதன்போது, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரும் உடனிருப்பார்.

இராகலை லிடேஸ்டல் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 166 தனிவீடுகள் உத்தியோகபூர்வமாக இன்று (04) கையளிக்கப்படும். தனி வீடொன்று 10 இலட்சம் ரூபாய் செலவில், இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ், யூ.என். எபிடாட் நிறுவனத்தால், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.

ஸ்டல் தோட்டப் பிரிவுகளான டியநில, மல்லியப்பு மற்றும் சூரியகாந்தி ஆகிய தோட்டங்களில், இயற்கை அனர்த்தங்களால், பாதிப்புக்கு உள்ளாகுமென இனங்காணப்பட்ட இடங்களில் வசித்தோரும், வீடு வசதிகளற்றவர்களுக்குமே தனிவீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

டியநில தோட்டத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை (01) விஜயம் செய்திருந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், கையளிக்கப்படவுள்ள வீடுகளை பார்வையிட்டனர்.

## விவசாயிகளுக்கு இழப்பீடு...

லுணுகம்வெஹர- அக்போபுர பிரதேசத்தில் உள்ள விவசாயிகளை நேற்று (3) சந்தித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எனவே வெகு சீக்கிரமாக விவசாயிகளுக்காக அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட உரம் கிடைக்கவில்லை என்றும் பூச்சிகொள்ளி மற்றும் இரசாயன பொருள்களின் விலை அதிகரிப்பால் விவசாயிகள் பாரிய அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் அவர்களின் வருமானம் குறைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை கவனத்தில்கொண்டு, விவசாயிகளுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும் என்றார்.

அரசாங்கத்தின் கொள்கை இல்லாத வேலைத்திட்டத்தால் அரசாங்கத்தின் உரத் திட்டம் முழுமையான ஏமாற்று வேலையாகியுள்ளதென்றும் ஆகேவே அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளால் விவசாயிகளே பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# மாகாண சபைத் தேர்தலை கண்டு அச்சமில்லை

வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்று (3) இடம்பெற்ற நிகழ்வென்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

யாருக்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். மக்கள் எமக்கு ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்துள்ளார்கள். ஜனநாயக ரீதியில் பிறிதொரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டு என்றார்.

அரசாங்கம் ஜனநாயக கொள்கைக்கு மதிப்பளித்து செயற்படும் என்பதுடன், அரசியல் மட்டத்தில் முன்வைக்கப்படும் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

மக்களின் நலனை கருத்திற் கொண்டு அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகிறது. நாட்டு மக்களின் நலனை கருத்திற் கொண்டு அரசாங்கம் ஒரு சில தீர்மானங்களை முன்னெடுத்துள்ளதே தவிர, விவசாயிகளை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் எவ்வித தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்றார்.

# பெறுமதியான இடங்கள்...

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (3) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரமுன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் பிரதானமானது வளங்களைப் பாதுகாப்பதாகும். குறிப்பாக பிரதமர் மஹிந்தவின் ஆட்சி காலத்தில் ஷங்ரிலா ஹோட்டலுக்கு வழங்கிய இராணுவ தலைமையகத்தின் இடத்தையும் மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்கும் என்ற தோற்றப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆட்சிக்கு வரும் முன்னர் மக்களிடம் தோற்றுவித்த நிலையில், இன்று இரண்டு வருடங்கள் செல்லும் முன்னர், எல்லாம் தலைகீழாகியுள்ளன என்றார்.

இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர், எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச உள்ளிட்டவர்கள் திருகோணமலைக்கு சென்று விட்டதாக நாம் அறிந்தோம். எனவே, இந்திய வெளிவிவகார செயலாளரின் இலங்கை விஜயமானது, திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை பெறுவதற்கும் ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவன ஒப்பந்தத்தை நீடிப்பதற்காகவுமே என்றார்.

இதனால்தான் இந்திய வெளிவிவகார செயலாளர் நேரடியாக திருகோணமலைக்கு எண்ணெய் தாங்கிகளை கண்காணிக்க விஜயம் செய்துள்ளார் என்றார்.

எனவே யுகதனவி மின்சக்தி ஏகபோக உரிமையை அமெரிக்காவுக்கு வழங்கியதால், எமது நாட்டில் மின்துண்டிப்பை கூட அமெரிக்க அரசாங்கமே செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேப்போல் தான் எரிபொருளின் ஏகபோக உரிமையும் இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.

ஆகவே, ராஜபக்ஷ குடும்ப நிறுவனம் இந்த நாட்டை ஏலம் விடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.. இவ்வாறு ஒவ்வொரு நாடுகளுக்கும் எமது நாட்டு வளங்களின் ஏகபோக உரிமையை வழங்கினால், எமது குழந்தைகளின் எதிர்காலம் அல்லது எமது நாட்டிஎன் எதிர்காலம் என்னவாகும் என கேள்வி எழுப்பினார்.

பஸ் ஊழியர்கள் வேறு தொழிலுக்குச் சென்றதால்

# நடத்துநர்கள், சாரதிகள் பற்றாக்குறை

## 6,800 தனியார் பஸ்களில் 800 பஸ்கள் சேவையில்




தனியார் பஸ்களில் வேலை செய்துவந்த ஊழியர்கள் தொழிலைக் கைவிட்டுவிட்டு, வேறு தொழில்களுக்கு சென்றுள்ளதால், பஸ் ஊழியர்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், 50 ஆயிரம் பஸ் ஊழியர்களில், 30 ஆயிரம் பஸ் ஊழியர்கள் தொழிலுக்கு வரவில்லை. நீண்ட காலமாக தங்களது வாழ்வாதாரம் இழந்துள்ளதால் அவர்கள் வேறு தொழில்களைத் தேடிச் சென்றுள்ளதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

தனியார் பஸ் ஊழியர்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையால் பஸ் போக்குவரத்துகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 6,800 தனியார் பஸ்களில் வெறும் 800 பஸ்களே தற்போது சேவையில் ஈடுபடுவதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.

## விற்பனைக்கு

தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பூங்காவுக்கு தோட்ட வேலைச் செய்யக்கூடிய நபர், காவலாளர் தேவை. தொடர்புகளுக்கு 070-7000400, 071-7743303 அழைக்கவும்

# விண்ணப்பம் கோரல்

புதிதாக ஆரம்பிக்கப்படும் வியாபாரங்களுக்கு உதவும் இலங்கையின் முன்னோடி நிறுவனமான வென்ச்சர் என்ஜின், 2021 ஆண்டுக்கான அதன் நிகழ்வுகளை ஆரம்பித்துள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் ஒக்டோபர் 22 நள்ளிரவு வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதில், நியாயமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் புதுமையான மற்றும் விரிவாக்க கூடிய வியாபாரங்களை ஆரம்பிக்கும் தொழில்முனைவோருக்கு உதவும் திட்டங்களுடன் 2021 ஆண்டு ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் நடத்தப்படும். இது புதிதாக ஆரம்பித்த அல்லது விருத்தி செய்ய பிரயத்தனப்படும் தொழில்முனைவோருக்கான நிகழ்வாயினும், பாரிய சந்தைவாய்ப்புடன் கூடிய ஆரம்ப நிலையில் உள்ள வணிக வியாபார யோசனைகள் உள்ள தொழில்முனைவோரும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

BOV Capital மற்றும் இந்திய ஏஞ்சல் நெட்வொர்க்கினால் நிறுவப்பட்ட வென்ச்சர் என்ஜின், லங்கன் ஏஞ்சல் நெட்வொர்க் (LAN) உடன் இணைந்து செயல்படுகிறது. வென்ச்சர் எஞ்சின் 2021க்கான பிளாட்டினம் ஸ்பான்ஸரான (Platinum Sponsor) Ford அறக்கட்டளையாகும்.

வென்ச்சர் என்ஜின் 2021 விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பல சுற்றுகளையும், பயிற்சி முகாம்களையும் எதிர்கொள்வார்கள். இதன் போது அவர்கள் முதலீட்டாளர்கள் மற்றும் நிபுணர்களுடன் கூடிய குழுவிற்கு தங்கள் யோசனைகளை தெளிவுபடுத்துவார்கள். விண்ணப்பம் சம்பந்தமான மேலதிக விபரங்களை wentureengine.lk எனும் இணையத்தளத்துக்கு சென்று பெற்றுக்கொள்ளலாம்.

பொதுநலவாய பாராளுமன்ற

# செயற்குழுக் கூட்டத்தில் சபாநாயகர் பங்கேற்பு



ஆசிய பிராந்தியத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி பொதுநலவாயப் பாராளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தின் மூன்று நாள் மெய்நிகர் அமர்வில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பங்கேற்றுள்ளார்.

மெய்நிகர் முறையில் மூன்று நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற பொதுநலவாயப் பாராளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமானது.

இங்கு,துணை க்குழுவினால் முன்வைக்கப்பட்ட முந்தைய தீர்மானங்களை பொதுநலவாய தலைமைச் செயலகம் செயல்படுத்துவது தொடர்பான விடயங்களை குழு உறுப்பினர்கள் ஆராய்ந்தனர். நல்லாட்சியை ஊக்குவிப்பதற்கும் சிறந்த நடைமுறைகளை அடையாளம் காண்பதற்குமான பொதுநலவாய நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்தும் நோக்கத்தில் ‘ஆண்டுக்கான பொதுநலவாய பாராளுமன்ற உறுப்பினர் விருது’ வழங்குவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# பஸ்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது



சாரதிகள், நடத்துநர்கள் சிலர் தங்களது தொழிலை விட்டுவிட்டு, வேறு தொழில்களுக்குச் சென்றுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, போக்குவரத்து சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

சாரதிகள், நடத்துநர்கள் சிலர் தங்களது தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களுக்கு சென்றுள்ளனர். மீண்டும் இவர்கள் பஸ் சாரதிகளாகவோ அல்லது நடத்துநர்களாகவோ தொழிலுக்கு வரும்பட்சத்தில் நாடு மீண்டும் முடக்கப்பட்டால் மீண்டும் தங்களது தொழிலை இழக்க வேண்டும் என்கிற அச்சத்திலேயே அவர்கள் தங்களது தொழில்களை விட்டுச் சென்றுள்ளதாகவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறினார்.

# 702 கிலோகிராம் மஞ்சள் சிக்கியது

**ரஸீன் ரஸ்மின்**

கற்பிட்டி, குடாவ கடலோரப் பகுதியில் இருந்து 702 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினர் குறித்த பகுதியில் நேற்று முன்தினம் (2) மேற்கொண்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே, குறித்த உலர்ந்த மஞ்சள் கைப்பற்றியதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



இவ்வாறு குடாவ பகுதியிலிருந்து கைப்பற்றப்பட்ட, உலர்ந்த மஞ்சள் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய தொற்று நீக்கம் செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

மேலும் கடற்படையினரால், நேற்று (3) அதிகாலை யாழ்ப்பாணம், கற்பிட்டி ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமாக இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட 1334 கிலோ 800 கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு

**விளம்பர நிறுவனத்திற்கு :**

- இரும்பு ஒட்டுனர்கள் (வெல்டர்கள்)
- மின்னியல் வல்லுநர்கள்
- M.D.F தச்சுவேலை வல்லுநர்கள்
- பெனர், Flex உற்பத்தி வல்லுநர்கள்
- உதவியாளர்கள்
- கனரக வாகன சாரதிகள்

**பிரின்ட் வேர்கர்ஸ் – 070 7000400**
**மாலகே – 076 6450526**

பட்ஜெட் யோசனைக்கு

# முன்மொழிவுகளை பெற நடவடிக்கை

கிராமிய மட்டங்களில் முன்மொழிவுகளைக் கோரி, சிறந்த யோசனையை இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கவுள்ளதாக, கிராமப்புற வீதிகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

வத்தளை- பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (2) இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கிராமிய மட்டங்களில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைப் பெறுவதானது, கிராமங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய பொருளாதார செயன்முறை, வாழ்வாதார அபிவிருத்தி, நலன்புரி விடயங்கள் ஆகியவை தொடர்பில் தெளிவாக அறிந்துக்கொள்ள முடியும்.

அந்த முன்மொழிவுகளை பசில் ராஜபக்‌ஷவிடம் முன்வைக்கப்பட்ட போது, வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி பரிசீலித்தபின், அதற்கான முன்மொழிவுகளை வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்க அவர் விரும்பினார் என தெரிவித்த நிமல் லன்சா, கிராம மட்டங்களில் பெறப்பட்ட முன்மொழிவுகளையும் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்குவதே தனது நோக்கம் என்றார்.

வரலாற்றில் முதற்தடவையாக இவ்வாறானதொரு முன்மொழிவு முன்வைக்கப்படவுள்ளதென அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை எதிர்கொண்ட கடினமான காலம் இப்போது முடிந்துவிட்டது. நேற்றுமுன்தினத்திலிருந்து கடினமான நேரம், மிகவும் சவாலான நேரம் முடிந்து விட்டது. இன்று முதல் அடுத்த நான்கு ஆண்டுகளில் இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் அனைத்து சேவைகளையும் நாங்கள் செய்வோம் என்றார்.




# கியூப தூதுவர் நீர்வழங்கல் அமைச்சரிடம் வேண்டுகோள்

கியூபா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும், நீர் வழங்கல் திட்டத்தின் விசேட நிபுணர்களின் அறிவு மற்றும் ஒத்துழைப்பை, இலங்கை நீர் வழங்கல் செயல் திட்டத்துக்கு வழங்குவதற்கு கியூபா அரசாங்கம் விரும்புவதாகவும், இலங்கையில் நீர் வழங்கல் தொடர்பான பொறியியலாளர்கள் மற்றும் நிபுணர்களின் அறிவை கியூபாவுக்கு வழங்குமாறும் கியூப தூதுவர் அந்ரோயஸ் மாச்சொளோ கொன்ஸாலெஸ் காரிடோ நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கியூப தூதுவர் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் அமைச்சில் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.கியூப தூதுவரின் வேண்டுகோளை காலம் தாழ்த்தாமல் இன்றே ஆரம்பிப்பதாக நீர்வழங்கல் அமைச்சர் குறிப்பிட்டார்.

தகவலறியும் ஆணைக்குழு:

# வெற்றிடங்களை நிரப்ப முடிவு




இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவியில் தற்பொழுது காணப்படும் வெற்றிடம் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்கு சிபாரிசுகளைக் கோருவற்கு பாராளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

இதன்படி, சட்டத்தரணிகள் சங்கம், பதிப்பாளர்கள் சங்கம், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், ஏனைய சிவில் சமூக அமைப்புக்களிடமிருந்து சிபாரிசுகளைக் கோருவதற்கு பாராளுமன்றப் பேரவை தீர்மானித்திருப்பதாக செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் ஒன்லைன் முறையில் நடைபெற்ற பாராளுமன்றப் பேரவைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ரிஜ்வே சிறுவர் வைத்திசாலைக்கு

# நன்கொடை வழங்கி வைப்பு



இலங்கை விமானப்படை சேவா வனிதாவால் சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்திசாலைக்கு ஒரு மில்லியன் ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டதாக இலங்கை விமானப்படை சேவா வனிதா பிரிவு அறிவித்துள்ளது.

உலக சிறுவர் தினத்தையொட்டி, ‘சிறு இதயம்’ எனும் (Little Heart) வேலை திட்டத்தின்கீழ், இந்த நன்கொடையாக ஒரு மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது.

## தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமித்தல்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள / ஏற்படும் வெற்றிடங்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்காக, பின்வரும் நிறுவனங்கள் அல்லது நிறுவனங்களின் வகுதிகள் ஆகியவற்றிலிருந்து பெயர் குறித்த நியமனங்கள் கோரப்படுகின்றன :

- இலங்மக சட்டத்தரனிகள் சங்கம் (சட்டத்தரிகள் மற்றும் சட்டம்சாரர் கல்வியியலாளர்களுடன் கலந்தாலோசித்து பெயர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் பெயர் குறித்து நியைமிக்கப்பட்ட ஆட்கள் திறமைவாய்ந்த சட்டத்தரணிகளாக அல்லது சட்டம்சார் கல்வியியலாளர்களாக இருத்தல் கவண்டும்).
- வெளியீட்டாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் ஊடக ஆட்களின் நிறுவனங்கள்
- வேறு சிவில் சமூக நிறுவனங்கள்;

**பெயர் குறித்து நியைமிக்கப்பட்ட ஆட்கள்;**

- சட்டம், ஆளுகை, பொது நிர்வாகம், சமூக சேவைகள், ஊடகத்துறை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லது முகாமைத்துவம் போன்ற துறைகைளில் அறிவு, அனுபவம் மற்றும் திறமை மிக்க பகிரங்க வாழ்வில் தமக்கென சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**மேலும், அத்தகைய ஆட்கள்;**

- பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஓர் உள்ளுரதிகார சபையின் உறுப்பினர்களாக இருத்தலாகாது.
- ஏதேனும் பகிரங்க அல்லது நீதிசார் பதவியை அல்லது வேறேதேனும் இலாபமீட்டும் பதவியை வகித்தலாகாது
- ஏதேனும் அரசியற் கட்சியுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருத்தலாகாது
- ஏதேனும் தொழிலை கொண்டு நடாத்துபவர்களாக, அல்லது ஏதேனும் உயர்தொழிலை புரிபவர்களாக இருத்தலாகாது.

பெயர் நியமனங்களை அனுப்புவதற்கு தகுதியுள்ள நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் பாராளுமன்றப் பேரவையின் பரிசீலனைக்காக குறைந்தது மூன்று வேட்பாளர்களை முன்னிலைப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன. பெயர் நியமனங்கள் குறித்த ஆளின் (ஆட்களின்) சுய விபரப் படிவத்துடன் / படிவங்களுடன் மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் ஊடாக,

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**
**பாராளுமன்றப் பேரவை**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது parliamentarycouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2021 ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலாயின் அதன் விடயப் பகுதியில் ‘தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியைமித்தல்’ என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்டது.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**

2021.09.30

நச்சுப் பதார்த்தங்கள், குப்பைகளை இறக்குமதி செய்வது

# உண்மைக்கு புறம்பானது

## அதற்கு அரசாங்கம் அனுமதிக்காது

■ ஆர்.ஜெயஸ்ரீராம்

மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு பதார்த்தத்தையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்காதென காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

சீனா மற்றும் வேறு சில நாடுகளில் இருந்து இரசாயன நச்சுப் பதார்த்தங்களையும் குப்பைகளையும் அரசாங்கம் இறக்குமதி செய்வதாக சிலர் பிரசாரம் செய்வது உண்மைக்குப் புறம்பானதென்றும் அவர் கூறினார்.




மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தில் சேதனப் பசளை தயாரிக்கும் 5 நிலையங்களை ஆரம்பிக்கும் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் என். விமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் சந்திரசேன மேலும் தெரிவிக்கையில், "சேதனப்பசளை பயன்பாட்டின் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தது, பொதுமக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காகும்.

"காரணம், நாட்டில் சிறுநீரக நோய், புற்றுநோய் ஆகிய தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு, இன்னும் அடையாளம் காணப்படாத பலர் சமூகத்தில் உள்ளனர் என சுகாதார அமைச்சின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

"குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாண மக்கள் இன்னும் சேதனப்பசளை பாவனைக்கு உட்படவில்லை. ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள விவசாயிகள் பல காலங்களுக்கு முன்னரே சேதனப்பசளை பயன்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வடக்கு, கிழக்கு மாகாண மக்களை சேதனப்பசளை பயன்பாட்டுக்கு உட்படுத்துவது சுலபமாகவுள்ளது" என்றார்.

## எழுத்தாளர் ஷெரீப் காலமானார்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



காத்தான்குடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரியும் பிரபல எழுத்தாளருமான ஜுனைதா ஷெரீப் (கே.எம்.ஊம். ஷரீப்), நேற்று (03) அதிகாலை காலமானார். மரணிக்கும் போது அவருக்கு வயது 80 ஆகும்.

இவர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளராகவும் கிழக்கு மாகாண பிரதித் தபால் மா அதிபராகவும் பல்வேறு அமைச்சுக்களில் செயலாளராகவும் நிர்வாகத்துறையில் பணியாற்றியுள்ளார்.

10க்கும் மேற்பட்ட நாவல்களையும் 100க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 200க்கும் அதிகமான வானொலி நாடகங்களையும் எழுதிய இவர், இலங்கையில் அதிக தடவைகள் தேசிய சாகித்ய மண்டல விருதுபெற்ற முஸ்லிம் இலக்கிய வாதியாவார்.

'சாணைக்கூறை' என்ற இவரது சமூக நாவல் சர்வதே ரீதியில் புகழ் பெற்றதாகும்.

கல்முனையில்

## விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு பைஸர்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இன்று (04) முதல் விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

நீண்ட கால நோய்களுடன் காணப்படும் விசேட தேவையுள்ள சிறுவர்களுக்கு, சிறுவர் விசேட நிபுணர்கள் மற்றும் பொது நிணர்கள் உள்ள வைத்தியசாலைகளில், இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.




விசேட தேவையுள்ள சிறுவர்கள் தங்களது கிளினிக் அட்டையுடன் அல்லது கிளினிக் செல்லாமல் வீட்டிலுள்ள சிறுவர்கள் அருகிலுள்ள ஆதார வைத்தியசாலைகளுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளுமாறும், ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

குடும்பத் தகராறில்

## காயமடைந்த நபர் மரணம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

குடும்பத் தகராறில் தாக்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (02) மாலை உயிரழந்துள்ளார்.

புதிய காத்தான்குடி 2 கப்பல் ஆலிம் வீதியில் வசித்து வந்த முஹம்மது முஸ்பீர் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவரது வீட்டில் குடும்பத் தகராறு இடம்பெற்றுள்ளது. மனைவிக்கு இவருக்கும் பிரச்சினை ஏற்பட்டு, பின்னர் மனைவியின் சகோதரன் இவரைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காயமடைந்த நபர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, நேற்று மாலை உயிரழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக இவரை தாக்கியதாக தெரிவிக்கப்படும் இவரின் மனைவியின் சகோதரனை, காத்தான்குடி பொலிஸார் கைது செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

உயிரிழந்த மேற்படி நபர், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும் இதனாலேயே குடும்பத் தகராறு ஏற்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.





பாரியளவிலான

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவந்த பாரியளவிலான கசிப்பு உற்பத்தி நிலையம், மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்று (03) அதிகாலை முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத்மாசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக, மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ். பி.பண்டார தலைமையிலான குழுவினர் இந்த முற்றுகையை முன்னெடுத்தனர்.

ஊற்றுப்புலத்தில் காணி பிடிப்பதற்கான

# 'அனுமதி இல்லை'

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியில், காடுகளை அழித்து, காணி பிடிப்பதற்கான எந்தவித அனுமதிகளும் வழங்கப்படவில்லையென, கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர், இப்பகுதியில் உள்ள காடுகளை அழித்து, காணிகளை அபகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாக, கடந்த 28ஆம் திகதி இரவு, கனரகத்தைப் பயன்படுத்தி, காடுகளை அழித்த சம்பவத்தை அவதானித்த சிலர், சம்பவ இடத்துக்குச் சென்று கேட்ட போது, காடழிப்பில் ஈடுபட்டவர்களால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில், சுமார் 60 ஏக்கருக்கும் மேற்பட்ட காடுகள், குறிப்பிட்ட ஒரு சிலரால் மாத்திரம் துப்புரவு செய்யப்பட்டிருப்பதாகவும் இது அரசியல்வாதிகளின் பெயருடன் அதிகாரிகளின் துணையுடன் மேற்கொள்ளப்படுவதாகவும், பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிவையில், இவ்விடயம் தொடர்பில், கரைச்சி பிரதேச செயலாளரைத் தொடர்புகொண்டு வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், குறித்த பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்படுவதற்கு எந்தவிதமான அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலரை நேரில் சென்று பார்வையிட்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளதாகவும் கூறினார்.

எனவே, குறித்த பிரதேசத்தில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் காடழிப்பு நடைபெறும் சமயங்களில் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கினாலும் பொலிஸார் அசமந்தப்போக்கை காட்டி வருவதாகவும், பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## 24 நாள்களேயான சிசு உயிரிழப்பு



■ எஸ். தில்லைநாதன்

பிறந்து 24 நாள்களேயான சிசு ஒன்று, கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த பவிகரன் நிருஜா என்ற பெண் சிசுவே, இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, சிசு உயிரிழந்தமை தெரியவந்தது.

இதையடுத்து முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், சிசுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.





## நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிப்பு



மன்னார் மாவட்டத்தில், அண்மையில், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலையான முன்னாள் விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள், மன்னாரில் உள்ள ஏனைய தேவையுடைய குடும்பங்களுக்கு, படையினரால் நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(படப்பிடிப்பு: சுப்பிரமணியம் பாஸ்கரன்)



போராட்டங்கள் நடத்தமுடியாத

## 'துர்ப்பாக்கிய நிலை'

### புலம்பெயர்ந்தோர் புரிந்துகொள்ள வேண்டும்

■ செ.கீதாஞ்சன்

தாயகத்தில் மக்கள் போராட்டங்கள் நடத்தமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்பதை புலம்பெயர் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என, நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வாசுகி சுதாகர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்,கொரோனா காலத்தில் தொழில்வாய்ப்பினை இழந்த மக்களுக்கான நிவாராண உதவி வழங்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (02) நடைபெற்றது. இதில் கலந்தகொண்டு உரையாற்றும் பொதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், கொரோனா இடர் காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அவர்களுக்கான அச்சுறுத்தல்கள், அரச பயங்கரவாதம், வன்முறை என்பன நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்றார்.



## வாள்வெட்டில் நால்வர் காயம்

■ க. அகரன்

வவுனியா - கோவில்குளம் பகுதியில், இளைஞர் குழு ஒன்று, வீதியால் செல்பவர்களை வழிமறித்து வாள் மற்றும் கோடரிகளால் தாக்கியதில், நால்வர் காயமடைந்துள்ளனர்.

மதுபோதையில் நின்றிருந்த குறித்த நபர்கள், வீதியால் செல்பவர்களை தாக்கியதுடன், வீடுகள் சிலவற்றுக்குள் புகுந்து உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தாக்கியுள்ளனர்.

இதனால் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில், அவர்களில் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற அவர், நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன், தாக்குதலை மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு, பொலிஸாருக்கு பணித்தார்.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறுநீரக செயலிழப்பால்

## 16 வயது சிறுவன் பலி

■ எஸ். தில்லைநாதன்

வடமராட்சி பகுதியில், சிறுநீரகங்கள் இரண்டும் செயலிழந்த நிலையில், 16 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 11ஆம் தரத்தில் கல்வி கற்ற கரணவாய் தெற்கு, மண்டான் பகுதியைச் சேர்ந்த கணேசன் கிருசிகன் (வயது 16) என்ற சிறுவன், இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

வெள்ளிக்கிழமை (01) பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் உயிரிழந்தார்.

இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர் இல்லம்; வடிவேல் மனவருத்தம்

கடந்த செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை இல்லம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ராஜகிரிய பொலிஸ் நிலையத்தில் பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடு அளித்த போதும், ஆக்கபூர்வமாக நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். இவ்விடயம் தொடர்பில், பாராளுமன்றத்தில் எழுத்துமூல அறிக்கை ஒன்றையும் முன் வைத்துள்ளேன் எனத் தெரிவித்தார்

'தொழிலாளர் இல்லம்' எனப்படுவது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகளில் பிரதிபிம்பமாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின்



உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாத முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், குண்டர்களுடன் இணைந்து, சங்கத்தின் தொழிலாளர் இல்லத்தை சேதப்படுத்தி, மிகவும் கீழ்த்தரமான விதத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சொத்துகளைச் சூறையாடும் நோக்கில், இவர்களால் அரங்கேற்றப்பட்ட நாடகத்தின் விளைவால், பல இலட்ச ரூபாய் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மேலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில், என்னுடைய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றார்.



தோட்ட அதிகாரியை கண்ணீர் மல்க வழியனுப்பிய

## வட்டகொடை தொழிலாளர்கள்

பி.கேதீஸ்

பெருந்தோட்டங்களில் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கிடையே பல்வேறு கசப்பான சம்பங்கள் அண்மைகாலமாக பதிவாகி வருகின்ற நிலையில், தோட்ட அதிகாரியொருவரை தோட்டத் தொழிலாளர்கள் கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்த சம்பவம் வட்டகொடை தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

அதேபோல் தொழிலாளர்களை தன் உறவுகள் போல வழி நடத்தி அன்பு செலுத்திய குறித்த தோட்ட அதிகாரியும் அத்தொழிலாளர்களை விட்டு பிரிய மனம் இல்லாது கண்கலங்கியுள்ளார்.

ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை, வட்டகொடை தோட்டத்தில் பல வருடங்களாக அங்கு சேவையாற்றிய தோட்ட அதிகாரி துல்சங்க ஜயதிலக்க, நேற்று முன் தினம் மட்டுக்கலை தோட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இடமாற்றம் பெற்ற அத்தோட்ட அதிகாரி அத்தோட்டத்திலிருந்து செல்லும்போது, அவர் சேவையாற்றிய வட்டகொடை கீழ்பிரிவு, வட்டகொடை மேற்பிரிவு, யொக்ஸ்போட் ஆகிய தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அத்தோட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் கண்ணீர் சிந்திய நிலையில் அவரை அங்கிருந்து வாகன பேரணியாக மட்டுக்கலை தோட்டம் வரை வந்து வழியனுப்பியுள்ளனர்.

மேலும் வட்டகொடை தோட்டத்தை இலாபகரமாக தரம் உயர்த்தியுள்ள குறித்த அதிகாரி, தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை நாட்களையும் வழங்கி தொழிலாளர்களின் நலனில் கூடுதல் அக்கரை செலுத்தியுள்ளார்.

சதொசவில் கையை வைத்த

## பெண் சிக்கினார்

ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் சதொச விற்பனை நிலையத்தில் திருட்டில் ஈடுபட்ட பெண்ணொருவர் நேற்று (3) சதொச நிலையத்தின் பாதுகாப்பு அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன், ரொத்தஸ் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண், குறித்த விற்பனை நிலையத்தில் பொருள்களை கொள்வனவு செய்ய வந்த போர்வையில், 1,800 ரூபாய் பெறுமதியான பொருள்களை திருடி, தனது கைப்பையில் மறைத்து வைத்துள்ளார்.

பின்னர், தான் வாங்கிய 300 ரூபாய் பெறுமதியான பொருள்களுக்கு மாத்திரம் கட்டணத்தைச் செலுத்தி விட்டு, வெளியேற முற்படுகையில், அவரது கைப்பை சோதனையிடப்பட்டுள்ளது. இதன்போதே, குறித்த பெண் சிக்கியுள்ளார்.

பின்னர், சதொச நிலையத்தின் கிளை முகாமையாளரால், பெண்ணால் திருடப்பட்ட



பொருள்களுக்கான கட்டணம் அறவிடப்பட்டதுடன், கடுமையான எச்சரிக்கையின் பின்னர், அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தப் பெண் தொடர்பில் சகல செதொச கிளைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி, கலபொட தோட்டத்தில்

## மிளகாய்ச் செய்கை சிறந்த விளைச்சலை தந்துள்ளது

ரஞ்சித் ராஜபக்ஸ

'சுபீட்சத்தின் நோக்கு' என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, நாவலபிட்டி, கலபொட தோட்டத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட மிளகாய்ச் செய்கை, அமோக விளைச்சலை தந்துள்ளது என, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் காய்ந்த மிளகாயின் 50,000 மெட்றிக் தொன்களாக காணப்படும் நிலையில், காய்ந்த மிளகாயின் தேவையை பூர்த்தி செய்வதற்காக, 2 இலட்சம் மெட்றிக் தொன் பச்சை மிளகாய் தேவைப்படுகிறது என்றார்.



இதற்காக 2,500 கிலோகிராம் மிள்காய் விதைகள் தேவைப்படுவதுடன், குறித்த விதைகளை உற்பத்தி செய்ய நாவலப்பிட்டி- அளுத்கம பிரதேசத்தில் ஏற்றுமதி விவசாய கிராம்ம் ஒன்றை உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த மிளகாய் உற்பத்தி மற்றும் விதை உற்பத்திக்காக குறித்த பிரதேசங்களில் தொழில்வாய்ப்பற்ற இளைஞர்கள் ஈடுபட்டு வருவதுடன், அவர்கள் தற்போது சிறந்த வருமானத்தைப் பெற்று வருவதாகவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில்

## 30,812 பேர் உயர் தரத்துக்கு தகுதி

இரா.யோகேசன்

மத்திய மாகாணத்தில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 41,262 மாணவர்களில், 30,812 பேர் க.பொ.த உயர்தரத்துக்கு தகுதிப்பெற்றுள்ளனர்.

இந்தப் பெறுபேறுகளின் வீதம் 74.67 அதிகரித்துள்ளது என பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கண்டி மாவட்டத்தில் 22,023 பரீட்சாத்திகளும், மாத்தளை மாவட்டத்தில் 7,836 மாணவர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 11,403 மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

இவர்களில் மாத்தளை மாவட்டத்தில் 5,590 மாணவர்களும், கண்டி மாவட்டத்தில் 16,923 மாணவர்களும் , நுவரெலியா மாவட்டத்தில் 8,299 மாணவர்களும் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிப்பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில் மாத்தளை மாவட்டம் 71.34 வீதமும், கண்டி மாவட்டம் 76.84 வீதமும் , நுவரெலியா மாவட்டம் 72.78 என்ற மாவட்ட வீத வளர்ச்சியும் காட்டுவதை அவதானிக்க முடிவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

5,000 பேருக்கு இலவசமாக

## மரக்கறிகளை பகிர்ந்த வர்த்தகர்



மொஹமட் ஆஸிக்

கண்டி, மடவளை நகரில் அமைந்துள்ள தனியார் காய்கறி மொத்த விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளர், அப்பிரதேசத்திலுள்ள சுமார் 5,000 ற்கும் மேற்பட்டவர்களுக்கு மரக்கறி பொதிகளை இலவசமாக வழங்கியுள்ளார்.

சுமார் முப்பதாயிரம் கிலோகிராமுக்கு மேற்பட்ட மரக்கறிகளே இவ்வாறு பகிரப்பட்டதுடன், காலை 7 மணி முதல் பி.ப 5.00 மணிவரை வரிசையில் காத்திருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவற்றைப் பெற்றுச் சென்றனர்.

'திகன வெஜிடபிள் ஸ்டோர்' உரிமையாளர் கே.நசீர்கான் என்ற வர்த்தகரே இந்த இலவச சேவையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களின் உருவாக்கத்தில்

## 'விதியின் விளையாட்டு'

நிலமேகம் பிரசாந்த்

கொரோனா தொற்றிலிருந்து, தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வு குறும்படமாக, 'விதியின் விளையாட்டு' எனும் குறும்படம் வெளிவந்து, மலையகத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

பத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தின் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவன் துலக்ஷன் இயக்கத்தில் இக்குறும்படம் வெளியாகியுள்ளது.




இக் குறும்படத்தில் தினுஷன் (தரம் 11, ஹைலண்ட்ஸ் கல்லூரி), அனோஜன் (தரம் 13, ஸ்டோனிகிலிப் கல்லூரி), பிலமோன் ஷேபியன் (தரம் 5, கொட்டகலை தமிழ் மகா வித்யாலயம்), மதுமிதன் (தரம் 10,கொட்டகலை தமிழ் மகா வித்தி.) என பல பாடசாலைகளை ஒன்றிணைத்து, வெளியாகியுள்ளது.

## பதிவுகள்!

ஒக்டோபர் 1ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி, பல்வேறான நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவற்றில் சில:








## கொண்டாட்டம்...

அக்கரப்பத்தனை, சென். ஜோர்ஜ் தோட்டத்தில் இயங்கும் பிரிடோ முன்பள்ளி அபிவிருத்தி குழு, சமூக அபிவிருத்தி குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில், சர்வதேச சிறுவர், முதியோர் தினம் இரதண்டாம் திகதி, முன்பள்ளி ஆசிரியை என். ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்றது. (துவாரகஷான்)





## சிறுவர் தினக் கொண்டாட்டம்

அக்கரப்பத்தனை, பெல்மோரல் தோட்டத்தில் இயங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் உத்தியோகஸ்தர் செல்வி. தமயந்தி, உதவியாளர் யு. நிலாந்தி தலைமையில், நேற்று முன்தினம் (02) சிறுவர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில், தோட்ட சிரேஷ்ட முகாமையாளர், உதவி முகாமையாளர், வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (துவாரகஷான்)







## முதியோருக்கு உலர்உணவுப் பொருட்கள்

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி, பன்மூர் இளைஞர் ஒன்றியத்தால் பன்மூர் தோட்டப் பகுதியில் வருமானம் இழந்த, 65 வயதுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட 94 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (கே. சுந்தரலிங்கம்)

# மீண்டும், மீண்டும் சுருங்கிக்கொள்ள நினைக்கும் வயிறுகள்

ஒரிரு நாள்களுக்கு சமாளிக்கலாம்; தொடர்ந்து சமாளிப்பது என்பது, பலருக்கும் இயலாத காரியமாகும். கொரோனா தொற்றுக்காலத்தில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டிருந்தமையால், பலரும் வீடுகளுக்குள்ளே முடங்கியிருந்தனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் முழுச் செயற்பாடுகளையும் இயங்கு நிலைக்குக் கொண்டுவருவதற்கு, அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால், அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியம் மற்றும் அத்தியாவசியமற்ற பொருள்களில் விலைகளால், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வோரும் மத்தியத்தர வர்க்கத்தினரும், பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

கொரோனா காலத்தில், ஓரிரு வேளைகளில் மட்டுமே உண்ட மக்கள், அந்த ஒருவேளையேனும் உண்ண முடியுமா எனும் பேரச்சத்தில், பொழுதுகளைக் கழித்துக்கொண்டிருக்கின்றனர். பொருள்களின் விலை அதிகரிப்பதற்குப் பிரதான காரணங்களில், எரிபொருள்களின் விலையேற்றம் ஒன்றாகும்.

போக்குவரத்துச் செலவு எனும் போர்வைக்குள், பொருள்களின் விலைகளை அதிகரித்துவிடுவர். இதற்கிடையில், உள்ளூர் சந்தைகளில் ஏற்படும் தட்டுப்பாடுகளையும், வர்த்தகர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பொருள்களின் விலைகளைத் தங்களுக்கு ஏற்றால் போல நிர்ணயித்துக்கொள்வர்.

'விட்டதைப் பிடிப்போம்' என்றாற்போல, விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அன்றாடம் வாங்கும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், ஓரளவுக்கு நினைவில் நிற்கும். அத்தியாவசியமற்ற, அவசர தேவைக்காகக் கொள்வனவு செய்யும் பொருள்களின் விலைகளை கேட்டாலே, அடுத்த கட்டத்துக்கு நகரமுடியாது திணறவேண்டியுள்ளது.

ஒவ்வொரு பொழுதும் விடியும் போதெல்லாம், பொருள்களின் விலைகள் அதிகரித்தே சென்றிருக்கின்றன. இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு தட்டுப்பாடு பிரதான காரணமாக காட்டப்பட்டாலும் பதுக்கி வைத்தலின் ஊடாக, செயற்கையான தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, பொருள்களின் விலைகளை அதிகரித்துக்கொள்கின்றனர். பால்மாவுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 1,140 ரூபாவால் அதிகரிக்குமாறு பால்மா இறக்குமதியாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. அதற்கான அனுமதி கிடைக்குமாயின், காலைநேர உணவை டீ ஒன்றினூடாகப் பூர்த்திச்செய்து கொள்ளும் சாதாரண குடிமகனின் ஒருவேளை கேள்விக்குறியாகிவிடும்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளிருந்து இன்னும் சில மாதங்களுக்குள் மீண்டெழுந்துவிடலாம் என்ற நம்பிக்கை, ஒவ்வொருவரின் மனங்களிலும் துளிர்விட்டுள்ளது.

அதேபோல, சுகாதார வழிக்காட்டல்களைப் பின்பற்றி, கொரோனா தொற்றிவிடக்கூடாது என்பதில் விழிப்பாக இருக்கின்றனர். ஆனால், விழுந்த பொருளாதாரத்திலிருந்து மீண்டெழுவது என்பது, பெரும் சிரமமாகவே இருக்கும்.

பொருள்களின் விலை அதிகரிப்பால், குறைந்த வருமானம் பெறுவோர், பெரும் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். முழுமையாக வழமைக்குத் திரும்புகையில். போக்குவரத்து உள்ளிட்ட இதர செலவுகள் கூடும். மாதாந்தம் அல்லது நாளொன்றுக்கு கிடைக்கும் வருமானம் குறைவாகவே இருக்கும். இது ஒவ்வொரிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், முறையாகத் தீர்வைக் காண்பது, அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழர்களின் பொருளாதார மீட்சி



என்.கே. அஷோக்பரன்
twitter:@nkashokbharan

தமிழ் மக்களின் அரசியல், குறிப்பாக, வடக்கு-கிழக்கு அரசியல், வெறுமனே தமிழ்த் தேசியத்தைப் பகட்டாரவாரப் பேச்சாக முன்வைக்கின்றதே அன்றி, தேசக்கட்டுமானம் தொடர்பில் எந்த அக்கறையும் காட்டுவதில்லை.

குறிப்பாக, பொருளாதார ரீதியில் தமிழ் மக்களை வலுப்படுத்தக்கூடிய எந்தத் திட்டங்களோ தூரநோக்கோ கூட, தமிழ் அரசியல்வாதிகளிடம் கிடையாது என்ற குற்றச்சாட்டை, என்னுடைய பத்தியிலும் மற்றைய தளங்களிலும் முன்வைத்திருக்கிறேன்.

அண்மையில், இதைப் பற்றிய கேள்வியொன்றை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஆ. சுமந்திரனிடம் முன்வைத்த போது, "இந்தக் குறையொன்று, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ளது" என்பதை, அவர் நேர்மையாக ஏற்றுக்கொண்டார். 'சப்பைக் கட்டு கட்டும்' அரசியல்வாதிகளிடையே, யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் இந்தப் பண்பு பாராட்டுக்குரியது.

இதேவேளை, வயதானவர்களின் கூடாரமாகிப்போய் உள்ள தமிழ்த் தேசிய அரசியல், பெருமளவுக்கு எந்தவித தூரநோக்கும் இல்லாமல், 'அரைத்த மாவை அரைத்துக் கொண்டு', வெற்று 'விடுதலை' பேசிக்கொண்டு, உள்ளுக்குள் 'குழாயடிச் சண்டை'களாகவே கடந்துகொண்டிருக்கிறது.

யாராவது இதைச் சுட்டிக்காட்டினால், அவர்களுக்குத் 'துரோகி'ப் பட்டம் கட்டிவிட்டு, மண்ணுக்குள் தலையைக் கொடுத்துவிட்டிருக்கும் தீக்கோழி போல, தமிழ்த் தேசிய அரசியல் கடந்துகொண்டிருக்கிறது.

மறைந்தவர்களுக்கான அஞ்சலி என்பது முக்கியமானதுதான். ஆனால், அதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு பாதியை என்றாலும், தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனைக்குக் கொடுக்க வேண்டாமா?

வெறும் உணர்ச்சிப்பிழம்பினையும் வாய்ச்சொல் பகட்டாரவாரத்தையும் வைத்துக்கொண்டு, அரசியல் நடத்துவது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா என்றெல்லாம், நாம் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது.

இலங்கையில், பொருளாதார ரீதியில் பின்தங்கிய கடையிரு மாகாணங்கள் கிழக்கும் வடக்கும். எந்த நிலத்தைத் தமிழர்கள் 'தாயகம்' என்கிறார்களோ, அந்த நிலமும் அதன் மக்களும், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். 30 வருட கால யுத்தத்தின் நிலை இது.

இதையேதான், அரசியல்வாதிகளும் சொல்வார்கள். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, 12 வருடங்கள் உருண்டோடிவிட்டன. இந்த 12 வருடத்தில், 30 வருடகால யுத்தத்தில் உழன்று கொண்டிருந்த மக்களை மீட்டெடுக்க, என்ன செய்தீர்கள் என்ற கேள்விதான் முக்கியமானது.

இந்த மக்களின் உணர்வுகளை விற்றுப்பிழைத்ததைத் தவிர, தமிழர் அரசியலும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும், தமிழ் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பிலும் தமிழ் மக்களின் பொருளாதாரம் தொடர்பிலும் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பிலும், அக்கறை காட்டவில்லை.

இந்த இடத்தில்தான், தமிழ் மக்களின் பொருளாதார மீட்சி பற்றிப் பேசுதல் அவசியமாகிறது. 'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு' என்கிறான் வள்ளுவன்.

தமிழ் அரசியல்வாதிகள், பகட்டாரவாரப் பேச்சில் வல்லவர்கள். மற்றவர்களை எதிரிகளாகவும் துரோகிகளாகவும் முத்திரை குத்தி, வாய்ச்சொல் அரசியல் செய்வதில் சமர்த்தர்கள்.

ஆனால், அவர்களுக்கு ஒன்று புரியவில்லை. பொருளின் பெருமை சொல்லும் வள்ளுவன், 'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரிய தில்' என்கிறான். அதாவது, ஒருவன் பொருளை ஈட்டவேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்கவல்ல வாள், அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை என்பதாகும்.

அதற்காக, எல்லாத் தமிழ் அரசியல்வாதிகளும் பொருளீட்டுவது பற்றிச் சிந்திப்பதில்லை என்று சொல்லிவிடவும் முடியாது. சிலர் தமக்கும் தம்மக்களுக்கும் (அதாவது, அவர்களது பிள்ளைகளுக்கு) என, நிறையவே பொருளீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனை ஏக்கர் நிலங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று, அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் நன்கறிவார்கள். ஆனால், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவே இருக்கிறார்கள்.

பொருளாதாரம் பற்றிச் சிந்திக்கவும் தம்மக்களை நேசிக்கவும், கொஞ்சம் அறிவும் நிறைய நல்லெண்ணமும் மிகுந்த தீர்க்கதரிசனமும் முழுமையான நேர்மையும், கொண்ட அரசியல்வாதிகள் தேவை. அது இன்று அரிதிலும் அரிதாகவே காணப்படுகிறது.

இங்கு அரசியலில் உள்ள பலருக்கு, அரசியலை விட்டால் வேறு வயிற்றுப்பிழைப்பு இல்லை என்ற நிலையிலேயே, தமிழர் அரசியல் பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆகவேதான், தம்பதவிகளைக் காப்பாற்றிக்கொள்ளவதற்கான அரசியலை, அவர்கள் முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் இரா. சம்பந்தன், ம.ஆ. சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற ஒரு சிலரைத் தவிர்த்து, மற்றையவர்களுக்குத் தாம் என்ன பேசுகிறோம் என்று கூடத் தெரியுமா என்ற ஐயம், அவர்களது பேச்சைக் கேட்கும் போது எழுகிறது.

மக்களது உணர்வுகளைத் தட்டியெழுப்ப எதையாவது பேசிவிட வேண்டியது.

தமிழ்த் தேசியத்துக்கு, இப்போது அவசர அவசியமாகியுள்ள 'விடுதலை' இத்தகைய கேவலமான அரசியல்வாதிகளிடம் இருந்தான விடுதலையே ஆகும். நிற்க!

பொருளாதார மீட்சிக்கான வழி என்ன? இது மிகமுக்கியமான கேள்வி ஆகும். இதற்குப் பதில் உற்பத்தி.

வடக்கு-கிழக்கின் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். பொருட்கள், சேவைகள் என, அங்கு உற்பத்தியைப் பெருக்குவதும் வணிகத்தை மேம்படுத்துவதும் மட்டுமே, எதிர்கால வளர்ச்சிக்கான ஒரே வழியாகக் காணப்படுகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் மக்களிடம் மீண்டும் மீண்டும் எடுத்துச்சொல்ல வேண்டிய கருத்து, உற்பத்தியைப் பெருக்குவதும் வணிகத்தை மேம்படுத்துவதும் ஆகவே இருக்க வேண்டும்.

மற்றவர்களின் உதவிகளிலும், கருணைப்பார்வையிலும் தங்கியிருக்கும் மக்கள் கூட்டமொன்று, அந்தத் தங்கியிருப்பிலிருந்து வெளியேவரும் வரை தப்பிப்பிழைக்கலாமேயொழிய வளர முடியாது.

'வீழ்வது வெட்கமல்ல; வீழ்ந்து கிடப்பதுதான் வெட்கம்'. வீழ்ந்த தமிழினம், எழுச்சி காண்பதற்கான ஒரே வழி, பொருளாதார மேம்பாடு மட்டும்தான்.

அதனால்தான், ஒரு தேசத்தைக் கட்டி எழுப்புவதிலும் பொருளாதாரம் என்பது முக்கியம் பெறுகிறது. 'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்' என்ற வள்ளுவன் வாக்கு ஞாபகமிருக்கட்டும்.

உற்பத்தியை எப்படிப் பெருக்குவது? குறித்த நிலப்பரப்பிலுள்ள வளங்கள் என்ன என்ற புரிதல் முதலில் ஏற்பட வேண்டும்.

வளம் என்பது, இயற்கை வளம் மட்டுமல்ல; மனித வளமும் செயற்கை வளங்களும் உள்ளடங்கும். அடுத்து, அந்த வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி, சந்தையில் கேள்வியுள்ள, கேள்வியை உருவாக்கக்கூடிய உற்பத்தியை எப்படி மேற்கொள்வது என்று சிந்திக்க வேண்டும். மிக முக்கியமாக மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி சிந்திக்க வேண்டும்.

மூலதனத்தைக் கவர்ந்திழுக்க, முதலீட்டாளர்களின் கவனத்தையும் ஆர்வத்தையும் கவர்ந்திழுக்க வேண்டும். அதற்கு உட்கட்டமைப்பு வசதிகள், முதலீட்டு ஊக்குவிப்பு வசதி வாய்ப்புகள் எல்லாம் அவசியம்.

இந்த இடத்தில்தான், உலகெங்கும் பரவி வாழும் புலம்பெயர் தமிழ் மக்களின் உதவி, இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அவசியமாகிறது. வடக்கு-கிழக்கில் முதலிடுவதும் அங்கு உற்பத்தியைப் பெருக்குவதும் அங்கு பொருளாதார மீட்சிக்கு உதவுவதும்தான், புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்த் தேசத்துக்குச் செய்யக் கூடிய பேருதவி.

உங்கள் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும், கடந்தகாலத்துக்கான நியாயம் தொடர்பானதே ஆகும்.

ஆனால், எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டு, கடந்த காலத்துக்கான நியாயத்தைத் தேடுவது என்ன பயனைத் தந்துவிடும்?

உண்மையாகத் தன் தாயகத்தையும் தன் தேசத்தையும் நேசிப்பவன், அதன் எதிர்காலத்தையும் நிரந்தர இருப்பையும் நீண்ட நிலைப்பையும் பற்றியே அதிகம் அக்கறை கொள்வான்.

உற்பத்தியைப் பெருக்குவதில், முதலீட்டைப் போலவே உழைப்பின் பங்கும் முக்கியமானது. வெளிநாடு போய், அங்கேயே குடியேறிவிட வேண்டும் என்பதையே, வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ள இளையோர் கூட்டம் உள்ள நாடும் தேசமும் ஒரு போதும் முன்னேறப்போவதில்லை.

தமிழ்த் தேசத்தின் பெரும் பின்னடைவுக்கு முக்கிய காரணம், உழைக்கும் படையின் வெளியேற்றம் ஆகும். எவ்வளவு அரிய மூளைவளம், இங்கிருந்து வெளியேறிவிட்டது; வெளியேறிக்கொண்டிருக்கிறது.

உடலிலிருந்து புது இரத்தம் வெளியேறுவதைப் போன்ற நிலை இது. நோய்கள் பீடித்த உடலாகத்தான் அந்த உடல் காணப்படும். அந்த உடல் எப்படி வாழும்?

ஆனால், நாட்டிலிருந்து வெளியேற விரும்பும் இளைஞர்களை மட்டும் பிழை சொல்லிவிட முடியுமா? அவர்களது எதிர்காலம் பற்றி, எந்த நம்பிக்கையும் கொடுக்க முடியாத அரசியல்வாதிகள் நிறைந்த இடத்தில், எந்த நம்பிக்கையில் அவர்கள் இங்கே வாழ்வது?

ஆகவேதான் இங்குள்ள உழைக்கும் படையை, மூளைவளத்தைத் தக்கவைப்பதற்கு மட்டுமல்லாது, மூலதனத்தை ஈர்த்தெடுக்கவும் வடக்கு-கிழக்கை பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்கவும், தீர்க்கதரிசனம் மிக்க புதிய அரசியல்பாதை, தமிழ்த் தேசிய அரசியலில் வகுக்கப்படவேண்டும்.

அதுவே, தமிழ் மக்களின் பொருளாதார மீட்சிக்கான பிள்ளையார் சுழியாக அமையும்.



## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சத்தில் பல போராட்டங்களை, இன்னல்களைப் பரப்பியும் புகுத்தியும் வைத்திருப்பவர்கள், பிறருக்கு எப்படிப் புத்திசொல்ல முடியும்?

தாம் கற்றுக்கொண்ட அறிவு, பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மூலம், வாழ்க்கையை வெற்றி கொண்டவர்கள், தாங்கள் பெற்ற ஞானத்தையும் அறிவையும் அனுபவங்களையும், தங்களை நாடுபவர்களுக்கு கற்றுக்கொடுத்தல் வேண்டும்.

மனம் வெளிச்சமான நிலையில், தான் எந்தப் பிரச்சினைகளையும் அழித்துவிட முடியும். இருள் விலகாமல் இருந்தால், வீணான சந்தேகம், பயம், குழப்பநிலை எனத் தேவையற்ற சஞ்சலங்கள் சிந்தனைகளை மூடிவிடும். மனக் குழப்பங்களால், எந்தத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு, நிறைவானதாகச் சரித்திரமே இல்லை.

எவர் எதைச் சொன்னாலும், தன்னை நம்பாமல், அதுவே வேதம் என நம்புகின்றவர்கள், அறிவு ஞானநிலையை விரும்பாத அப்பாவிகளாக மாறிவிடுகின்றனர்.

அவர்களை அறியாமலேயே, தமது அறியாமையால், எதிர்பாராத விளைவுகள், கவலைகள், தோல்விகள் போன்றவற்றை உருவாக்கிவிடுகின்றனர்.

நாங்கள் தேடிப்பெறும் அறிவின் மூலமும் பல்வேறான மக்களுடன் பழகி, அறிந்து கொள்ளும், உணர்ந்துகொள்ளும் வாழ்க்கை முறைகள் மூலமும், விழிப்புநிலையைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

உலகம் எனும் அறிவுக் கோவிலில், பலதையும் அறிக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பஸ் சேவை வேண்டும்



கிளிநொச்சி, கந்தபுர ம் ஊடாக முக்கொம்பன் கிராமத்திற்கான பஸ் சேவைகள், கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நடைபெறாமல் உள்ளன.

கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதி, மூன்று இடங்களில் பெருங்குழிகள் உருவானதன் காரணமாக, அக்கராயனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நடைபெற்ற பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது.

குறித்த வீதியின் குழிகளை மூடுமாறு, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம் உட்பட, பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக, முக்கொம்பன் கிராமத்திற்கான பஸ் சேவைகள் நடைபெறாமல் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கராயன் பிரதேச பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற ஆசிரியர்கள், போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். பாடசாலை நடைபெற்றால், மாணவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால், குறித்த வீதி விரைவாகப் புனரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும், மூன்று மாதங்கள் கடந்தும் குறித்த வீதியின் மூன்று குழிகள் மூடப்படாமல் உள்ளன.

இந்த வீதி புனரமைக்கப்படுமானால் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

–நடராசா கிருஸ்ணகுமார்




விநியோக பிரிவின் உதவி பொது முகாமையாளர் காலிங்க ஜயந்த, பத்தரமுல்ல, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு கணனிகளை கையளிப்பதைக் காணலாம்.

### சிறுவர்களின் ஒன்லைன் கல்விக்கு

# Sisumaga+ ஆதரவு

ஒவ்வொரு பிள்ளைக்கு இடைவிடாத கல்வியைத் தொடரும் வாய்ப்பை வழங்குவது எனும் யூனியன் அஷ்யூரன்ஸ் Sisumaga+ இன் கொள்கையின் பிரகாரம், நாடு முழுவதையும் சேர்ந்த சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் ஒன்லைன் கல்விக்கான வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

397 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு டப்லெட்கள் மற்றும் மடிக்கணனிகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், நாடு முழுவதையும் சேர்ந்த 10,632 சிறுவர்களை உள்வாங்கி யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் இதர ஏழு நிறுவனங்களின் அனுசரணையில் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

தொற்றுப் பரவல் காரணமாக சிறுவர்களின் கல்வியில் இடைவெளி நீடிக்கப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் முறையில் கல்வியைத் தொடர வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. பல சிறுவர்களுக்கு கணனி அல்லது டப்லட் வசதிகள் இல்லாத சூழல் காணப்படுகின்றமையால் அவர்களின் எதிர்காலம் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனது.

'அனைத்தையும் விட முன்னர் சிறுவர்கள்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்த தேசிய சிறுவர் தின நிகழ்ச்சிகளின் அங்கமாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துக்கு 50 சாதனங்களை யூனியன் அஷ்யூரன்ஸ் பங்களிப்புச் செய்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸின் Sisumaga+ என்பது, பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொள்ள உதவும் காப்புறுதித் தீர்வாக அமைந்திருப்பதுடன், ஒவ்வொரு பிள்ளைக்கும் தடங்கலில்லாத கல்விக்கான உறுதி மொழியை வழங்குவதாகவும் உள்ளது.

கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 16.6 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 45.3 பில்லியனையும், 2021 ஜுன் மாதமளவில் மூலதன போதுமை விகிதமாக (CAR) 300% ஐக் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. 76 கிளைகளைக் கொண்டுள்ளதுடன், 3,000க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு யூனியன் அஷ்யூரன்ஸ் இயங்குவதுடன், தொடர்ச்சியாக ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகளில் முதலீடுகளை மேற்கொண்டு, ஆயுள் காப்புறுதித் துறையில் எழும் மாற்றங்களுக்கேற்ப பணியாற்றிய வண்ணமுள்ளது.

# தேசிய பாமசி ஹெல்ப்லைன் ஸ்தாபிப்பு




SLT-MOBITEL மற்றும் eChannelling ஆகியன சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்க மருந்து வழங்குநர் சங்கத்துடன் கைகோர்த்து, தேசத்தின் முதலாவது மருந்துப் பொருட்கள் ஹெல்ப்லைன் சேவையை அறிமுகம் செய்துள்ளன. இந்த நெருக்கடியான காலப்பகுதியில், நாட்டில் சுகாதார பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தமது அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அழைப்புகளுக்கு பதிலளிப்பது மற்றும் மருத்துவ ஆலோசனைகளை வழங்குவது தொடர்பில் 120 க்கும் அதிகமான மருந்துகள் வழங்குநர்களுக்கு SLT-MOBITEL இனால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சேவையினூடாக இலங்கையர்களுக்கு தமது வீடுகளில் பாதுகாப்பாக இருந்த வண்ணம் 0716222555 எனும் NPH ஹொட்லைன் இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அரசாங்க மருந்து வழங்குநர் சங்கத்தின் நோக்கம், சிறந்த மருந்துப் பொருள் வழங்கல் சேவையை நாட்டின் மக்களுக்கு நோயாளர்களை மையப்படுத்திய பராமரிப்புடன் வழங்குவதாக அமைந்துள்ளது. SLT-MOBITEL மற்றும் eChannelling ஆகியன அரசாங்க மருந்து வழங்குநர் சங்கத்துக்கு அவசியமான ஆதரவை வழங்குவதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த பொது மக்களுக்கு சுகாதார பராமரிப்பு அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கு இணைப்புத்திறனை வழங்கியுள்ளது. முதல் படியாக, கொழும்பு 1 முதல் 15 வரையான பிரதேசங்களை உள்வாங்கி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், பின்னர் படிப்படியாக நாடு முழுவதிலும் விஸ்தரிக்கப்படும்.

நோயாளர்கள் NPH தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பை ஏற்படுத்தி, மருந்து வழங்குநரிடமிருந்து தமது மருந்துச் சிட்டைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அழைப்பை மேற்கொள்வோருக்கு, பயிற்சிகளைப் பெற்ற மருந்து வழங்குநர்கள் உதவிகளை வழங்குவார்கள். பின்னர் அழைப்பை மேற்கொண்டவருக்கு SMS link ஒன்று அனுப்பி வைக்கப்படுவதுடன், அதில் தமது மருந்துச் சிட்டையை பதிவேற்றம் செய்ய முடியும். இதன் பின்னர் ஒசுசல மருந்துகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும். பொது மக்களின் நலன் கருதி மும் மொழிகளிலும் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

டிஜிட்டல் மாற்றியமைப்பு சேவையினூடாக அரசாங்க மருந்து வழங்குநர் சங்கத்துக்கு உதவிகளை வழங்கும் SLT-MOBITEL மற்றும் eChannelling ஆகியன, தமது அர்ப்பணிப்பான செயற்பாட்டினூடாக தேசிய பாமசி ஹெல்ப்லைன் (NPH) வசதியுடன், அரசாங்க வைத்தியசாலை பாமசி சேவைக்கு வலுச்சேர்த்துள்ளது.


நோயாளர்களுக்கு தமது மருந்துச் சிட்டையை பதிவேற்றம் செய்ய வேண்டிய தேவை மாத்திரம் காணப்படும் நிலையில், தமது மருந்துச் சிட்டையின் நிழல்படத்தை eChannelling இனூடாக பதிவேற்றம் செய்யும் வசதியை SLT-MOBITEL வழங்கும்.

மும்பை

### போதைப்பொருள் சிக்கியதில்

# ஷாருக்கானின் மகனிடம் விசாரணை

மும்பையில் கப்பலில் போதை ஒழிப்புப்பிரிவு பொலிஸ் நடத்திய சோதனையில் பல கோடி மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது. இந்த வழக்கில், பொலிவுட் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.



மும்பையில் நேற்று நள்ளிரவில் ஒரு கப்பலில் சிறப்பு விருந்துக்கு சிலர் ஏற்பாடு செய்திருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. கோடீஸ்வரர்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், திரையுலக பிரபலங்கள், மொடலிங் உலகைச் சேர்ந்தவர்கள் என பல்வேறு தரப்பினரும் இடம் பெற்றிருந்தனர். அங்கு போதைப்பொருட்கள் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து பொலிஸார் பயணிகள் போல படகில் ஏறினர். படகு மும்பையில் இருந்து கிளம்பி கடலுக்குள் பயணித்த போது, சிலர் போதை பொருள் பயன்படுத்தியது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து 8 பேரை பிடித்து அவர்களிடம் இருந்த கோகைன் உள்ளிட்ட விலைமதிக்கத்தக்க போதை பொருளை பறிமுதல் செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக பொலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானின் மகன் ஆரியன் உள்பட 8 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



சண்டிகர்

# முதலமைச்சர் வீட்டுக்கு முன் விவசாயிகள் போராட்டம்

ஹரியானா முதலமைச்சர் வீட்டுக்கு முன் விவசாயிகள் நடத்திய போராட்டத்தில், வன்முறை வெடித்துள்ளது.

ஹரியானா முதலமைச்சர் மனோகர்லால் கட்டார் தலைமையிலான பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சி நடக்கிறது. மத்திய அரசாங்கம் நிறைவேற்றியுள்ள மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து, இங்குள்ள விவசாய அமைப்புகளைச் சேர்ந்தோர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தொடர் மழை காரணமாக, பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் நெல் கொள்முதல் செய்வதை, மத்திய - மாநில அரசாங்கங்கள் நிறுத்தி வைத்திருந்தன. இதைக் கண்டித்தும், வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஹரியானா மாநிலம் கர்னாலில் உள்ள முதலமைச்சர் கட்டார் வீட்டு முன் போராட்டம் நடத்த விவசாய அமைப்புகள் முடிவு செய்தன.

கர்னாலில் குவிந்த விவசாயிகள், முதலமைச்சர் வீடு நோக்கி பேரணியாக செல்லத் துவங்கினர். தடுப்புகளை உடைத்து, முதலமைச்சர் வீடு நோக்கி முன்னேறிய விவசாயிகளை பொலிஸார் தடுத்தனர்.

நிலைமை கட்டுங்கடங்காமல் போகவே, போராட்டம் நடத்தியோர் மீதுபொலிஸார் தண்ணீரை பீய்ச்சியடித்து கலைத்தனர்.

புதுடெல்லி

### கணக்கில் வராத

## 500 கோடி ரூபாய் கறுப்பு பணம் கண்டுபிடிப்பு

குஜராத் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில், கணக்கில் வராமல் 500 கோடி ரூபாய் கறுப்பு பணம் பதுக்கியது, வருமான வரித்துறை அதிகாரிகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

> **கணக்கில் காட்டாமல் 200 கோடி ரூபாயை நிலத்தில் முதலீடு செய்துள்ளது. நிலம் விற்பனை வாயிலாக கிடைத்த 100 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையை மறைத்து உள்ளது**

குஜராத் மாநிலத்தில் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனம், கணக்கில் வராத பரிவர்த்தனைகள் நடத்துவதாக தகவல் கிடைத்தது. அஹமதாபாதில் உள்ள அந்நிறுவனத்தின் 22 அலுவலகங்களில், வருமான வரித்துறையினர் சமீபத்தில் தீவிர சோதனை நடத்தினர். இதன் வாயிலாக கணக்கில் வராத 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான கறுப்பு பணம் கண்டறியப்பட்டு உள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது:

அஹமதாபாதில் உள்ள பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனம், கணக்கில் காட்டாமல் 200 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிலத்தில் முதலீடு செய்துள்ளது. நிலம் விற்பனை வாயிலாக கிடைத்த 100 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகையை மறைத்து உள்ளது. நில பேரம் வாயிலாக 230 கோடி ரூபாய்க்கும் மேல் பரிவர்த்தனைகள் தரகர்கள் வாயிலாக நடந்துள்ளன.இதன்படி கணக்கில் வராத 500 கோடி ரூபாய்க்கும் மேல் கறுப்பு பணம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

காந்திநகர்

# பிரதமர் மோடியின் தாயார் வாக்குப்பதிவு

குஜராத் மாநிலம், காந்திநகர் மாநகராட்சியின் 11 வார்டுகளில் கவுன்சிலர்கள் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று (03) தொடங்கி நடைபெற்று வருகிறது.



இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் மோடி, நகரின் ராய்சன் கிராமத்தில் உள்ள ஒரு வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று, மாநகராட்சி தேர்தலுக்கு வாக்களித்தார்.

காலை முதலே வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வாக்குப்பதிவு நடைபெற்று வருவதால் அப்பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



திண்டுக்கல்

# பாசமில்லாத உறவுகள்

வாரிசுகளாக ஏழு பிள்ளைகள் 20 பேரன், பேத்திகள் இருந்தும், உணவுக்கு வழியின்றி தவித்த 80 வயது மூதாட்டியை, தன்னார்வ அமைப்பினர் மீட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சிறுகுடியைச் சேர்ந்த 80 வயது முதட்டியின் கணவர் 2018 ஆம் ஆண்டு விபத்தில் இறந்தார். இவருக்கு ஒரு மகன், ஆறு மகள்கள் உள்ளனர். 20 பேரன், பேத்திகள். இம்மூதாட்டிக்கு சொந்தமாக 75 சென்ட் நிலம், கணவர் விபத்தில் இறந்ததால் கிடைத்த மூன்று இலட்சத்தி 75 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையும் இருந்தன.

இருப்பினும், மூன்று ஆண்டுகளாக அவரது வாரிசுகளில் ஒருவர் கூட அவரைக் கவனிக்காமல், கொடுமைப்படுத்தினர். சொத்து, பணத்தைப் பறித்து, வீட்டில் இருந்தும் துரத்தி விட்டனர். உடனிருந்த காலத்தில், ஒரு வேளை உணவும் கொடுக்காமல் துன்புறுத்தியதாக மூதாட்டி கூறினார்.

இந்தக் கொடுமைகளை கண்ட அக்கம் பக்கத்தினர், தன்னார்வ அமைப்பிற்கு தகவல் கொடுத்தனர். மூதாட்டியை பொலிஸார் விசாரித்தனர். உலக முதியோர் தினத்தையொட்டி, அவரை முதியோர் காப்பகத்தில் ஒப்படைத்தனர்.

கள்ளக்குறிச்சி

### பொய்யான வாக்குறுதிகளால்

# தி.மு.க ஆட்சி செய்கிறது

கள்ளக்குறிச்சியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உள்ளாட்சித் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை, அறிமுகம் செய்யும் கூட்டம் நடைபெற்றது.



அங்கு உரையாற்றிய அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், கடந்த சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகத்தினர், 505 பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்கள்.

இந்த ஐந்து மாதங்களில் அவர்கள் உறுதியாக எந்த திட்டங்களையும் செயற்படுத்தவில்லை. மகளிர்க்கான தாலிக்கு தங்கம் மற்றும் பெண்களுக்கான ஸ்கூட்டி திட்டங்கள் தற்போது எங்கு இருக்கிறது என்று தெரியாமல் உள்ளது. திமுகவினர் கொடுத்த வாக்குறுதிகளான நீட் தேர்வு ரத்து, மகளிருக்கான ஆயிரம் ரூபாய் பணம், பெற்றோல், டீசல் விலை குறைப்பு, போன்ற எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

மேலும், தி.மு.க ஆட்சியில் நாளிதழ்களை படிக்கும் போதே கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருவது தெரிகிறது. இப்படி மக்கள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என ஓ.பன்னீர்செல்வம் பேசினார்.

அவுஸ்திரேலியா

# ட்ரோனை கௌவியது முதலை

அவுஸ்திரேலியாவில் டார்வினில் (Darwin) உள்ள மிருகக் காட்சிச் சாலையொன்றின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஆவணப்படமொன்றை எடுப்பதற்காக ட்ரோன் (Drone ) ஒன்று பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் முதலைகள் நிறைந்த பூங்காவின் குளத்தின் மேல் பறந்த ட்ரோனை எதிர்பாராத விதமாக முதலையொன்று பறவையென நினைத்து கவ்விச் சென்றுள்ளது.

இதனையடுத்து சேதத்துக்குள்ளான ட்ரோனை



மீட்டபோது அதில் முதலை ட்ரோனை கவ்வியமை பதிவாகியுள்ளது. குறித்த வீடியோவானது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

ஸ்பானிய லா லிகா தொடர்:

# பார்சிலோனாவை வீழ்த்திய அத்லெட்டிகோ மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நடப்புச் சம்பியன்களான அத்லெட்டிகோ மட்ரிட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற பார்சிலோனா உடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ வென்றிருந்தது.

அத்லெட்டிகோ சார்பாக, தோமஸ் லெமர், லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அண்மைக் காலமாக பின்னடைவை பார்சிலோனா சந்தித்து வருகின்ற நிலையில்,



இப்போட்டி முடிவு எதுவானாலும் பார்சிலோனாவின் முகாமையாளராக றொனால்ட் கூமன் தொடர்வார் என இப்போட்டிக்கு முன்பதாக பார்சிலோனாவின் தலைவர் ஜோன் லபோர்ட்டா தெரிவித்திருந்தார்.



சீனா

## உலகின் மிகச் சிறிய மின்சாரக் கார்

உலகின் மிகச் சிறிய மின்சாரக் கார் சீனாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வுலிங் நனோ( Wuling Nano)

எனப் பெயரிடப்பட்டுள்ள இக் காரானது டாடா நனோ காரை விட சிறியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தியான்ஜின் சர்வதேச கார் கண்காட்சியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட இக் காரானது, மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இருவர் மட்டுமே பயணிக்கக் கூடிய இக் காரில் 6.6 கிலோவோட் ஏசி அடாப்டர் மூலம் நான்கரை மணி நேரத்தில் சார்ஜ் ஏற்றிக் கொள்ளமுடியும் என்றும் ஒரு முறை சார்ஜ் செய்தால் 305 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்க முடியும் என்றும் அதன் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஹொண்டுராஸ்

## ஒரு வீட்டால் 40 வீடுகள் தீக்கிரை

ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தால் அருகில் இருந்த 40 வீடுகளுக்குத் தீ பரவிய சம்பவம் நேற்று முன்தினம் (02) மத்திய அமெரிக்க நாடான ஹொண்டுராஸில் (Honduras ) இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் தீ பரவிய வீடுகளில் இருந்த 400க்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனவும் விமானப்படை வீரர்கள் ஹெலிகாப்டர் உதவியுடன் தீயை நீண்ட நேர போராட்டத்திற்குப் பின்னர் அணைத்துள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் இத் தீவிபத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை.

அமெரிக்கா


## அழுத பெண்ணுக்கு கட்டணம் அறவிட்ட வைத்தியசாலை

பெண்ணொருவர் அழுதமைக்காக வைத்தியசாலையில் கட்டணம் அறவிடப்பட்ட விநோத சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த மிட்ச் எனும் பெண் தனது மச்சத்தை நீக்குவதற்காக மருத்துவமனை ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

அங்கு அவருக்கு மச்சத்தை நீக்குவதற்கான அறுவைச் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிகிச்சையின் போது பயத்தில் குறித்த பெண் அழுதுள்ளார். சிகிச்சையின் பின்னர் வழங்கப்பட்ட கட்டணப்பட்டியலில் சிகிச்சைக்கான கட்டணமாக 223 டொலர்களும், சிகிச்சையின் போது



அழுதமைக்காக பிரீஃப் எமோஷன் என்ற பெயரில் 11 டொலர்களும் கட்டணமாகக் கோரப்பட்டிருந்தது.

இவ்விடயம் குறித்து அதிர்ச்சியடைந்த அப் பெண்மணி தனது டுவிட்டர் பக்கத்தில் தனக்கு மருத்துவமனை அளித்த கட்டண பற்றுச் சீட்டைப் பகிர்ந்துள்ளார்.

தற்போது சமூக வலைத்தளங்களில் இந்த அழுகைக் கட்டண விவகாரம் பேசு பொருளாக மாறி வருகின்றது.

அமெரிக்கா

## மணமக்கள் முன்னே அனைத்துப் படங்களையும் அழித்த 'போட்டோகிராபர்'



திருமண விழாவில் புகைப் படக்கலைஞர் ஒருவர் தான் எடுத்த அனைத்து புகைப்படங்களையும் மணமக்கள் கண்முன்னே அழித்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

தனது திருமணத்தில் போட்டோஷூட் செய்வதற்கான பணத்தை மிச்சப்படுத்த நினைத்த நபரொருவர் தனது நண்பரையே திருமணத்திற்கான புகைப்படக் கலைஞராக அமர்த்தியுள்ளார்.

அந்த நபரும் மணமகன் தனது நண்பன் என்பதால் குறைந்த பணத்தில் புகைப்படம் எடுக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

எனினும் திருமணத்தன்று காலை 11 மணியிலிருந்து இரவு 7.30 மணி வரை அவருக்கு உணவு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் கடும் கோபமடைந்த அந்த போட்டோகிராபர் மணமக்கள் கண்முன்னேயே திருமண நிகழ்வில் எடுத்த அனைத்துப் படங்களையும் அழித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "புகைப்படம் எடுப்பதற்காக என்னை உணவருந்த விடவில்லை. தொடர்ந்து படமெடுத்துக் கொண்டிருந்ததால் நான் மிகவும் சோர்வடைந்தேன். இதனால் எனக்கு கடும் ஆத்திரம் ஏற்பட்டது. அதனால் தான் அனைத்துப் புகைப்படங்களையும் அழித்து விட்டேன்" என அந்நபர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்களில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு விதமான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்

அமெரிக்கா

## அமெரிக்காவில் வலுக்கும் போராட்டம்

உலகின் பல பகுதிகளிலும் நடைமுறையிலுள்ள 'கருக்கலைப்பு சட்ட விரோதம்" என்ற சட்டமானது அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்திலும் அண்மையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இச்சட்டப்படி, கருவில் சிசுவின் இதயத் துடிப்பு உணரப்பட்ட காலத்திற்குப் பின்னர் கருக்கலைப்புச் செய்ய அனுமதி கிடையாது. அவ்வாறு கருக்கலைப்புச் செய்வதாக இருந்தால் அதற்கு முன்னரே செய்து கொள்ள வேண்டும் ` எனக் கூறப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான நேரங்களில் இதயத்துடிப்பை உணர 6 வாரங்கள் ஆகலாம். இக் காலகட்டத்திற்குள் தாங்கள் கருவுற்றிருக்கிறோம் என்பதே பெரும்பாலான



பெண்களுக்குத் தெரிய வருவதில்லை. இதனால் ஏறத்தாழ கருக்கலைப்பு என்பதே செய்ய முடியாத நிலை அங்கு எழுந்துள்ளது.

அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் கருக்கலைப்புக்கு கடும் கட்டுப்பாடுகள் வர வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெண்கள் பலர் மாபெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.





யாழ். தீவக வேலணை கழகங்களுக்கு

## சிறீதரனால் விளையாட்டு உபகரணங்கள்

சுப்ரமணியம் பாஸ்கரன்

> அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ், வேலணை மேற்கு சிற்பனை ஸ்ரீமுருகன், அல்லைப்பிட்டி வெண்புரவி ஆகிய விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் தீவகத்தின் வேலணை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று விளையாட்டுக் கழகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சிறீதரனின் இவ்வாண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூன்று விளையாட்டு கழகங்களுக்கு குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ள.

அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம், வேலணை மேற்கு சிற்பனை ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், அல்லைப்பிட்டி வெண்புரவி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு இவ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்களான திரு சிவலிங்கம் அசோக்குமார், பிலிப் பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்துள்ளனனர்.



ஐ.பி.எல்:

## சென்னையை தோற்கடித்த ராஜஸ்தான்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: ராஜஸ்தான்

சென்னை: 189/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் ஆ.இ 101 (60), இரவீந்திர ஜடேஜா ஆ.இ 32 (15), பப் டு பிளெஸி 25 (19), மொயின் அலி 21 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: சேட்டன் சகாரியா 1/31 [4], ராகுல் டெவாட்டியா 3/39 [4], கிளென் பிலிப்ஸ் 0/3 [1])

ராஜஸ்தான்: 190/3 (17.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷிவம் டுபே ஆ.இ 64 (42), யஷஸ்வி ஜைஸ்வால் 50 (21), சஞ்சு சாம்ஸன் 28 (24), எவின் லூயிஸ் 27 (12), கிளென் பிலிப்ஸ் ஆ.இ 14 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 2/30 [4])

இதேவேளை, ஷார்ஜாவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நடப்புச் சம்பியன்களான மும்பை இந்தியன்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றிருந்தது.

இந்நிலையில், டுபாயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென்னையும், டெல்லியும் மோதவுள்ளன.




இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் யுனைட்டெட்; எவெர்ற்றன் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், எவெர்ற்றனுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

யுனைட்டெட் சார்பாக, அந்தோனி மார்ஷியல், அன்ட்றூஸ் டௌன்ட்சென்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஆர்சனலுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



## பார்சிலோனா செல்லும் ஸ்டேர்லிங்க்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்கை அடுத்தாண்டு கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 26 வயதான ஸ்டேர்லிங்கை இன்னொரு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலும் அவதானித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிற்றியில் கடந்த 2015ஆம் ஆண்டு இணைந்த ஸ்டேர்லிங்க், சிற்றியுடன் இன்னும் இரண்டாண்டு ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றார். சிற்றிக்காக 201 போட்டிகளில் 79 கோல்களைப் பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 04 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.